அரசாங்க நிர்வாகச் சுற்றறிக்கை: 8/2015

எனது இல:ADD.SEC/INV/ELE 2015

அரசாங்க நிர்வாக, மாகாண சபைகள், உள்ளூராட்சி மற்றும் சனநாயக ஆட்சி அமைச்சு
சுதந்திர சதுக்கம்
கொழும்பு 07
2015.03.30

சகல அமைச்சுக்களின் செயலாளர்கள்
திணைக்களத் தலைவர்கள்
மாகாண சபைகள் மற்றும் உள்ளூராட்சித் தலைவர்கள்
அரச கூட்டுத்தாபனங்கள் மற்றும் நியதிச்சட்ட சபைகளின் தலைவர்கள்

**தேர்தல்கள் தொடர்பில் அரச சேவையிலுள்ள முறைகேடுகளைப் புலனாய்வு செய்வதற்கான விசேட குழு**

சனாதிபதித் தேர்தல் 2015 இற்கு முன்னரும் அதற்குப் பின்னரும் அறிக்கையிடப்பட்டுள்ள தேர்தல் தொடர்பில் அரச சேவையிலுள்ள முறைகேடுகளைப் புலனாய்வு செய்வதற்கு அமைச்சரவையின் அனுமதியுடன் கௌரவ. அரசாங்க நிர்வாக, மாகாண சபைகள், உள்ளூராட்சி மற்றும் சனநாயக ஆட்சி அமைச்சரினால் மேலே குறிப்பிடப்பட்ட விசேட குழு நியமிக்கப்பட்டுள்ளது.

02. இது குறித்து மக்களை விழிப்பூட்டுவதற்கும் மற்றும் இக் குழுவிற்கு அவர்களின் தகவல்களைச் சமர்ப்பிக்க அவர்களுக்கு ஒரு சந்தர்ப்பத்தினை வழங்கவுமெனத் தயாரிக்கப்பட்ட அறிவித்தல் ஒன்றின் மாதிரி இத்துடன் இணைக்கப்பட்டுள்ளது. 15’’X20’’ என்னும் அளவில் அதனைத் தயாரித்து தங்களின் அலுவலகத்திலுள்ள அறிவித்தல் பலகையில் மேற்படி அறிவித்தலினைக் காட்சிப்படுத்துமாறு தாங்கள் இத்தால் கேட்டுக்கொள்ளப்படுகின்றீர்கள்.

03. மேற்படி குழுவின் உறுப்பினர்கள் அல்லது இக் குழுவின் கீழ் சேவையாற்றும் புலனாய்வு அலுவலர்களுக்கு, குறித்த முறைப்பாடு ஒன்றினை புலனாய்வு செய்வதற்கு அவர்கள் தங்களின் நிறுவனத்திற்கு வருகை தந்தால் அவர்கள் உரிய தகவல்களைப் பெற்றுக்கொள்வதற்கு ஏதுவாக பின்வரும் வசதிகளை வழங்குமாறு தாங்கள் தயவுடன் கேட்டுக்கொள்ளப்படுகின்றீர்கள்.

I. தங்களின் அலுவலகத்தில் பேணப்படும் கோவை ஒன்றிலுள்ள குறித்த ஆவணங்களின் பிரதிகளை, அவை கோரப்படும் பட்சத்தில் “உண்மையான பிரதி” என்னும் சொற்களைக் குறிப்பிட்டு பதவிநிலை அலுவலர் ஒருவரினால் அவற்றை சான்றுறுதிப்படுத்தி வழங்குதல்.
II. மேலே I இல் குறிப்பிடப்பட்டவாறு புலனாய்வு செய்யப்பட்ட கோவைகளின் பாதுகாப்பை உறுதிப்படுத்துவதற்கு அவசியமான நடவடிக்கைகளை எடுத்தல்.
III. நிறுவனத்தினால் பேணப்படும் குறித்த கோவை ஒன்றினை தமது கட்டுக்காப்பில் எடுத்து வைத்துக்கொள்வது குழு உறுப்பினர்கள் மற்றும் புலனாய்வு அலுவலர்களுக்கு அவசியப்படும் பட்சத்தில் இது குறித்து எழுத்துமூல பதிவு ஒன்றினை மேற்கொண்டு உரிய கோவைகளை வழங்குதல்.

IV. எங்கெல்லாம் அவசியப்படுமோ அங்கெல்லாம் குறித்த விடயம் தொடர்பில் தங்களின் நிறுவனத்தின் கீழ் சேவையாற்றும் அலுவலர் ஒருவரின் வாக்குமூலத்தினைப் பதிவுசெய்வதற்குத் தேவையான வசதிகளை வழங்குதல்.
V. அவசியப்படும் இடங்களிலெல்லாம் புலனாய்வுகளுடன் தொடர்புறும் தங்களின் நிறுவனத்தில் களப் பரிசோதிப்புக்களுக்கான குழு உறுப்பினர்கள் மற்றும் புலனாய்வு அலுவலர்களுக்கு தேவையான வசதிகளை வழங்குதல்.

04. இச் சுற்றறிக்கையில் சுட்டிக்காட்டப்பட்ட ஏற்பாடுகளை தங்களின் கீழ்வரும் சகல நிறுவனங்களினதும் தலைவர்களுக்குத் தெரியப்படுத்துவதற்காக அவசியமான நடவடிக்கைகளை எடுக்குமாறு தாங்கள் தயவுடன் கேட்டுக்கொள்ளப்படுகின்றீர்கள்.

05. தேர்தல் தொடர்பில் அரச சேவையிலுள்ள முறைகேடுகளைப் புலனாய்வு செய்வதற்கான விசேட குழுவின் வகிபாகத்தினை யதார்த்தமாக்குவதற்கும் மற்றும் சுதந்திரமானதும் நீதியானதுமான தேர்தல்களுக்கான சூழலினை உறுதிப்படுத்துவதற்கும் தங்களினால் வழங்கப்படும் ஒத்துழைப்பு பெரிதும் வரவேற்கப்படுகின்றது.

ஒப்பம்/ ஜே. தடல்லகே
செயலாளர்
அரசாங்க நிர்வாக, மாகாண சபைகள்,
உள்ளூராட்சி மற்றும் சனநாயக ஆட்சி அமைச்சு

**அறிவித்தல்**

**"மக்களின் நன்மைக்காக சுதந்திரமானதும் நீதியானதுமான தேர்தலினை உறுதிப்படுத்துவதற்கான பொறுப்பினை நிறைவேற்றுவோம்"**

சனாதிபதித் தேர்தல் 2015 இற்கு முன்னரும் அதற்குப் பின்னரும் அறிக்கையிடப்பட்டுள்ள பின்வரும் விடயங்களுடன் தொடர்புபட்ட முறைப்பாடுகளைப் புலனாய்வு செய்வதற்கு அமைச்சரவையின் அனுமதியுடன் அரசாங்க நிர்வாக, மாகாண சபைகள், உள்ளூராட்சி மற்றும் சனநாயக ஆட்சி அமைச்சரினால் விசேட குழு ஒன்று நியமிக்கப்பட்டுள்ளது.

1. பரப்புரை செயற்பாடுகளுக்காக அரசாங்க நிறுவனங்களின் மூலம் அரச வளங்களின் துஸ் பிரயோகம்
2. தேர்தல் செயற்பாடுகளுக்காக அரச சொத்துக்களின் துஸ் பிரயோகம்
3. தேர்தலுக்காக அரச பணத்தின் துஸ் பிரயோகம்
4. அரச அலுவலர்களை அரசியல் செயற்பாடுகளில் ஈடுபடுத்தலும் அதில் சுய ஈடுபாடும்.
5. மேற்படி தேர்தல் தொடர்பிலான ஏனைய முறைகேடுகள்

மேலே குறிப்பிடப்பட்ட ஏதேனும் விடயம் குறித்த ஏதாவது இருப்பின் 2015 ஆம் ஆண்டு ஏப்பிரல் மாதம் 15 ஆம் திகதியன்றோ அல்லது அதற்கு முன்னரோ பின்வரும் முகவரிக்கு தகவலைத் தாங்கள் சமர்ப்பிக்க முடியும்.

தலைவர்
தேர்தல் தொடர்பில் அரச சேவையிலுள்ள முறைகேடுகளைப் புலனாய்வு செய்வதற்கான விசேட குழு
புலனாய்வுகள் மற்றும் நடவடிக்கைகள் பிரிவு
அரசாங்க நிர்வாக, மாகாண சபைகள், உள்ளூராட்சி மற்றும் சனநாயக ஆட்சி அமைச்சு
சுதந்திர சதுக்கம்
கொழும்பு 07